<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 203/2012**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
<u>வாக்குமூலம் – பி.வா.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்லமுத்து | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | தாராபுரம் | நாள் | : | 03.01.2024 |

1987 ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024 ஆண்டு ஜனவரி 03 ம் நாள் சாட்சியம்.

---

<u>**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. என் பெயரிலும் என் மகன்கள் பெயரிலும் இந்த நீதிமன்றத்தில் வாதிகள் அ.வ.எண். 270/2004 என்ற வழக்கு தாக்கல் செய்து 27.02.2007 ம் தேதியில் அவ்வழக்கு குறித்து தீர்ப்பாகி குறித்து நினைவில்லை. மேற்படி வழக்கு இந்த வழக்கு சொத்தில் சரிபாதியை வாதிகளுக்கு கிரையம் கொடுப்பதற்கு கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்ததை நிறைவேற்ற வேண்டி தாக்கல் செய்த வழக்கு என்றால் கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கவே இல்லை.

2. மேற்படி தீர்ப்பாணையின் பேரில் வாதிகள் நிறைவேற்று மனு எண். 46/2009 தாக்கல் செய்து, 11.06.2009 தேதியில் நீதிமன்றம் வாதிகளுக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்தது என்றால் எனக்கு உடல்நிலை சரியில்லததால் எனக்கு தெரியவில்லை. மேற்படி கிரைய ஆவணத்தின்படி நிறைவேற்று மனு எண்.41/2011 தாக்கல் செய்து வாதிகள் வழக்கு சொத்தில் பொதுவில் சரிபாதியினை நீதிமன்ற அமீனா மூலம் 19.03.2012–ம் தேதியில் சுவாதீனம் எடுத்துக்கொண்டனர் என்றால் எனக்கு உடல்நிலை சரியில்லை.

3. எனக்கு பாத்தியப்பட்ட பொதுவில் சரிபாதி சொத்து நீதிமன்ற தீர்ப்புகளின்படி வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் நான் எழுதிக்கொடுக்கவில்லை. தாவா சொத்துக்கள் என் தகப்பனாரின் பூர்வீக சொத்துக்கள் ஆகும். என் தகப்பனாருக்கு நான் ஒரே மகன் மட்டும்தான். நான் வழக்கு சொத்தினை யாருக்கும் எழுதிக் கொடுக்கவில்லை என எதிர்வாதம் செய்கிறேன். என் தகப்பனார் இறக்கும்வரை என்னுடன்தான் இருந்தார்.

4. என் தகப்பனார் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்துப்பார்க்கவில்லை. வழக்குச் சொத்துக்கள் வாதிகள் மற்றும் எனது சுவாதீனத்தில் உள்ளது என்றால் இல்லை, எனது சுவாதீனத்தில் மட்டும்தான் உள்ளது. என் தகப்பனாருக்கும் எனக்கும் மனவிரோதம் இல்லை. என் மகன்களுடன் நான் நேசமாகத்தான் உள்ளேன். நான் எனது எதிர்வழக்குரைக்கும் என் தகப்பனார் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கும் எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. **பி.வா.சா.ஆ.1** உயில்சாசனத்தை எழுதிய ஆவண எழுத்தர் பெயர் தெரியவில்லை. உயில்சாசனம் எழுதுவதற்கு நான் உடன் செல்லவில்லை. உயில்சாசனத்தின் சாட்சிகளை நான்தான் அனுப்பிவைத்தேனா என்றால் என் தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் சாட்சிகள் என் தகப்பனாரை அழைத்து சென்று உயில் எழுதிய பின்னர் கொண்டு வந்துவிட்டனர். உயில் எழுதிய சமயத்தில் நடந்த இதர விசயங்கள் எனக்கு நினைவில்லை.

6. உயில்சாசனத்தில் அனைத்து சொத்துக்களையும் தன் பேரனுக்கு எழுதி வைத்ததாக பொது மனிதர்கள் சொன்னார்கள். உயில் எழுதும் போது என் மகன்களும் உடன் சென்றனர். **பி.வா.சா.ஆ.1** பதிவு செய்யப்படவில்லை. யார் யார் சாட்சி

கையொப்பம் போட்டு இருப்பார்கள் என்று தெரியவில்லை. உயில்சாசனத்தை என் மகன்கள்தான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். உயில்சாசனத்தில் என்ன வாசகங்கள் கண்டுள்ளது என தெரியாது. எனக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளதால் என் மகன்கள் தான் நீதிமன்றத்திற்கு என்னை அழைத்து வந்தனர்.

7. என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பொதுவில் சரிபாதி பாத்தியத்தை குறித்து வாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணை இல்லை, நீதிமன்ற தீர்ப்புபடி எனது பொதுவில் சரிபாதி பாத்தியத்தை வாதிகள் பெறுவதை நான் ஆட்சேபணை செய்ய இயலாது என்றால் சரியல்ல. வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிவடைந்தது.</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

**Sd/- Ms.Mathivathani Vanangamudi**,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.